திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)

Open Access & Peer Reviewed Journal

E-ISSN : 2583-0449

The Powerful warriors of Perunkathai

S. Jessintha[1], Dr. B. Jaiganesh[2]

Part time Research Scholar[1], Head of Department[2], Department of Tamil, SRM Institute of Science and Technology, Kattankulathur, India

Manuscript ID : **MT146A0082**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 18.10.2022

Revised: 27.10.2022

Accepted: 31.10.2022

Published: 05.11.2022

Pages : 55-68

DOI: 10.5281/zenodo.7372372

ABSTRACT:

In Sangam era, poets narrates or portraits the life history of the powerful kings, their warships, their personality, the people's culture and civilization, and so on. But they never portrayed them conquering the enemy by getting the support of the deity in the hymns. 'Porunar' (in Tamil) means 'Doer', 'Warrior' or 'King'. A masculine man who is well-known for his bravery should have a strong heart, courage, and enormous energy. Valour was considered an important characteristic of men to live his life in harmony. The words like 'Valour' [Maram], Anger [Sinam], Fury [Seetram] and Wrath [Vanchinam] were found everywhere in the passages of Purappadal. Here the word 'Valour' [Maram] has a broad meaning including strength, courage, anger, rage, strength, power, victory, immortality, destruction, and killing. This article researches and studies about an epic King Udayanan's great valour as a soldier, as a king, as friend for Minister Yuki and as a military veteran who lived with endless glory for protecting his people to the very end despite caring and saving his own life.

KEYWORDS:

Perungathai, Bravery, Oppilakia Nokil Sangakaalam, Purananooru

பெருங்கதையின் ஆற்றல்மிகு மறவர்கள்

சூ. ஜெசிந்தா[1], **முனைவர் பா. ஜெய்கணேஷ்**[2]
பகுதி நேர ஆய்வாளர்[1], *துறைத்தலைவர்*[2]
தமிழ்த்துறை, எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
காட்டாங்குளத்தூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சங்கப் பாடல்களில் தெய்வத்தின் துணையைப் பெற்று பகைவனை வென்றதாகப் புலவர்கள் பாடவில்லை. 'பொருநர்' எனின் 'போலச் செய்பவர்' என்றும், 'படைவீரன்' என்றும், 'அரசன்' என்றும் பொருள்படுகிறது. களங்காணும் துணிவும், அமர் செய்யும் அஞ்சா நெஞ்சமும், ஆற்றலும் கொண்டவரே ஆண்மை சான்றவர் எனக் கருதப்பட்டனர். பரந்துபடு நல்லிசை எய்தி வாழ வீரம் (மறம்) பயன்பட்டது. 'மறம்', சினம், சீற்றம், வஞ்சினம், வெஞ்சினம் ஆகிய சொற்கள் புறப்பாடல்களில் எங்கும் வருகின்றன. 'மறம்' என்று பயின்று வருவதைப் பார்க்கும்போது, அச்சொல்லின் விரிந்து பரந்த பொருளானது, தீரம், வீரம், சினம், சீற்றம், வலிமை, ஆற்றல், வெற்றி, அமர், அழித்தல், கொல்லுதல் எனப் பல பொருட்களில் வழங்குகிறது. தன்னுயிர் காக்கும் காதலினும், அனைத்துயிரையும் காக்கும் காவலே முதற் பெருங்கடமையாய்க் கொண்டு ஒழுகிய பெருங்கதை வேந்தன் உதயணனின் படைவீரர் மறம், பகையரசர்தம் மறம், அமைச்சன் யூகியின் நட்பு மறம், உதயணனின் போர் மறம் குறித்தும் பெருங்கதை வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

கருச்சொற்கள்

பெருங்கதை, வீரம், ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், புறநானூறு

முன்னுரை

"களம்புகல் ஓம்புமின் தெவ்வீர்! போர் எதிர்ந்து
திங்கள் வலித்த கால்அன் னோனே"[1]

ஒவ்வொரு நாளும் எட்டுத் தேர்களை முழுமையாகச் செய்யும் ஆற்றல் மிக்க தச்சன் ஒருவன்; தேர்ச்சக்கரம் ஒன்றுக்கு மட்டும், ஒருமாத காலம் செலவிட்டு முயன்று செய்த தேர் பெற்றிருக்கும் வலிமை போல வல்லமைமிக்க ஒரு போராளி, எங்களிடமும் இருக்கிறான். எனவே பகைவர்களே அவனை எதிர்த்துப் போர்க்களம் புகுவதைத் தவிர்த்திடுங்கள் என்று ஔவையார் அதியமானின் வீரத்தை சுட்டுவது போல பெருங்கதை வேந்தன்,

“பனிவரை மார்பன் றனிய னாகி
வேழ வேட்டத்து வீழ நூறி”[2]

“கணையொடு திரிதருங் காமன் போல”[3]

“வீரருள் வீரன் விசைபெற விடுதலின்”[4]

“கோல வுருவொடு குன்றிடைப் போந்தவோர்
காலன் கொல்லிவன் கானத் தோர்க்கென்”[5]

இமயமலை போன்று மார்பினை உடைய உதயணன், தான் ஒருவனாகத் தனித்து நின்று, யானை வேட்டையில் பிரச்சோதனனால் ஏவப்பட்ட படை வீரர் அனைவரும் மடிந்து வீழும்படி கொன்று, அம்புடன் திரியும் மன்மதன் போன்று, வீரருள் வீரனாக, கொடிய சினம் உடையனாக, வாளினைக் கையிலேந்த அமர் செய்தமையைக் கண்டவீரர்களும், இயமனோ? என அச்சம் கொண்டு சிதறியோடியதன் கண், அவன்தம் படை வீரர் மறம், அவனுடன் போரிட்டழிந்த பகை மன்னர் மறம், உற்ற அமைச்சனாக இலங்கிய யூகியின் நட்பு மறம் உதயணன் மறம் குறித்தும் பெருங்கதையின் ஆற்றல்மிகு மறவர்கள் வழி ஆய்வதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

படைவீரர் மறம்

அரசர்கள் வீரம் நிறைந்தவராகவும், போருக்கு அஞ்சாதவர்களாகவும் இருக்க வேண்டும். ஆயினும்,

“கடுஞ்சினத்த கொல்களிறும் கமழ்புரிய
கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர் தேரும் நெஞ்சு (Puliyurkesigan, 2010)
டைய புகன்மறவரும்
என நான்குடன் மாண்டதாயினும் மாண்ட”[6]

இத்தகையப் போரில் வீரம் மிக்க படைகளையுடையவன் மார்தட்டித் தனித்துத் தனித்து செல்லக்கூடாது என்பதை,

“மறனுடைய ஆளுடையான் மார்பு
ஆர்த்தல் இன்னா”[7] (Rama Subramaniyam, 2009)

என்ற பாடலடி உணர்த்துகின்றது. இதன்மூலம் போரில் படைகளுடன் தான் செல்ல வேண்டும். போருக்கு படையே இன்றியமையாதது என்பதும் புலப்படுகிற தாகையால், உதயணனின் வத்தவ நாட்டுத் திறமிக்க வீரரும், தம்மால் கொல்லப்பட வேண்டிய உஞ்சை நகர வீரர்கள் இருக்கும் இடத்தைத் தேடிப் போய்,

“பைந்தலை துமித்துச் செங்குடர் சிதறிப்
பிடித்த வாளர் மடித்த வாயர்
திருவமர் மூதூர்த் தெருவுங் கோணமும் (Ananthi, 2018)
ஒருவழி யொழியாது”[8]

ஐந்து தலைப்பாம்பின் கண் போன்று கோபமிக்க கண்களை, உடையவராக, அப்பகை வீரர்களது பசிய தலையினைத் துண்டித்தனர். சிவந்த குடல்களைச் சிதறச் செய்தனர். வாளினைக் கையில் கொண்டு, மடித்த உதடுகளை உடையவராக, செல்வம் நிறைந்த பழைய ஊரான உஞ்சை நகரின் தெருக்களிலும், மூலை முடுக்குகளிலும் எங்கும் உயிர் உடையவர் யாவரையும் அஞ்சி நடுங்கச் செய்து, கரையில் ஏறிப் படர்வதை விரும்பி அலை உலாவக் கூடிய கடற்பரப்பில், தமக்கு வேண்டிய இரையாகிய மீனை விரும்பித் தேடித்திரியும் சுற்றமாகிய சுறாமீன் கூட்டம் போல உதயணனை எதிர்ப்போரை ஆராய்ந்து திரிந்து கொண்டிருந்தனர் உதயணன் படைவீரர். பின்னர் உதயணன் தலைமையிலான படை, பகை மன்னர்களை எதிர்த்துப் போரிடுகிறது. உதயணனின் படை வீரர்களுள் வில் வீரர்,

“வணங்கு சிலைச் சாபம் வார்களை கொளிஇ
நிணம்பட நெஞ்சமு நெற்றியு மழுத்தி”[9]

தத்தமது பகைவரின் மார்பும் நெஞ்சும் புண்படும்படி அழுத்தினர். கடிய வாளேந்திய காலாட்படை வீரரும்,

“கைபுடைபரந்து கலங்கத் தாக்குநர்
புடைநிரைத் தாரைக் கடிநிர்க் கைவாள்
படையுநெருக்கி”[10]

தங்கள் வாளின் பிடியை முறியச் செய்யக் கூடிய பிடிப்பை உடையராகி, தத்தம் வீரப் பண்பும் முறை முறையே பொங்கி எழுகின்றதாகி பகைவரது உள்ளம் கலங்கும்படி தாக்கினர்.

“புகழப்பட்ட போர்வல் புரவி
இகழ்த லின்றி யேறிய வீரர்
வெம்முரண் வீரமொடு தம்முட்டாக்கவும்”[11]

குதிரைப் படை வீரர்கள், குதிரை நூலோரால் புகழ்ந்து பேசப்பட்டனவும், போரில் வன்மை கொண்டனவும் ஆகிய சிறந்த குதிரைகளின் மீது இகழ்ச்சி இன்றி ஏறிய வீரர்கள், கொடிய வலிமை மிக்க வீரத்துடன் பகைவருடன் போரிட,

“கொலைநவில் பல்படை கொண்ட மாட்சிய
மலை நிமிர்ந்தன்ன மழகளிற் றெருத்திற்
சிலையுங் கணையுஞ் சீர்ப்பமை வட்டும்
மழுவுங் குந்தமு முழுமயிற் பீலியும்
சங்கமுங் கணையமுஞ் சத்தியும் வாளும்
பிண்டி பாலமும் பிறவு மெல்லாம்
தண்டாக் கருவி தாந்துறை போகிய
வண்டார் தெரியன் மறவர் மயங்கி
அருநில மதிரத் திரிதர லோவா
விதிவட்டமொ டாதிய கதிவயிற்
பாழி பயிற்றி நூழி லாட்டவும்”[12]

கொலைத் தொழிலையுடைய பல படைக்கலங்களைக் கொண்ட சிறப்புடையனவும், மலை நிமிர்ந்ததைப் போன்று இளமையான ஆண் யானைகளில் ஏறியிருந்து வில்லும் அம்பும் சிறப்பமைந்த வட்டும் மழுவும் குந்தமும், பெரிய மயிற் பீலியும், சங்கும், கணையமும், வேலும், வாளும், பிண்டியும், பாலமும் இவை போன்ற பிற போர்க் கருவிகளையும் கொண்டு போர் செய்து பழகிப் பழக வாகை சூடிய யானை மறவர்கள், அரிய நிலம் அதிரும்படியாகச் சுற்றுவதில் ஒழியாதவராகி, வீதியும் வட்டமும் உள்ளிட்ட யானையின் செலவில் வன்மை உண்டாகச் செலுத்தித் தத்தம் பகைவரைக் கொன்று குவித்து, உதயணன் அப்போரில் வெற்றி பெறவழி கோலினர் உதயணன் தம் படை மறவர் என்பதையும் பெருங்கதை சுட்டுகிறது.

பகை மன்னர் மறம்

ஒருவனை ஒருவன் கொல்லுதலும், ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும் இவ்வுலகில் புதுமையன்ற. ஆனால் நெடுஞ்செழியனின் வலிமையை அறியாதவராகத் தாம் ஒன்றுகூடி இரு பெருவேந்தரும், ஐம்பெரும் வேளிரும், போரிட்டு நின்றனர். அவர்களைத்தான் ஒருவனாகவே நின்று போரிட்டுக் கொல்லுதலைச் செய்தானே நெடுஞ்செழியன் அதுதான் புதுமை என்ற புறநானூற்றுப் பாடலானது,

“ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று; இவ்வுலகத்து இயற்கை”[13]

என்று கூறுவதைப் போல பெருங்கதையில் மகத மன்னன் தருகசனுடன் நட்பு கொண்டிருந்த, உதயணனையும் இவனது ஆற்றலையும் அறியாது போர் செய்ய வருகின்றனர் பகை மன்னர் எண்மர். எவ்வாறெனில், போருக்குச் சென்று வெல்லற்கரிய ஆற்றலையுடைய தருகசனையாம் அனைவரும் ஒருங்கு கூடி வெல்வோம் என போர்

தொடுத்து வருகின்றனர். அமர்க்களத்தில் அஞ்சாநெஞ்சம் உடையோராய் அமர்புரிய வேண்டும் என்று உறுதிகொண்டு வந்தவர்கள் முறையே,

“விடுகணை விற்றொழில் விரிசிக னுள்ளிட்
டலருந் தோற்றத் தரிமா னன்னவர்
மத்தநல் யானை மதிய வெண்குடை
வித்தக நறுந்தார் விலங்குநடைப் புரவி
அத்தினா புரத்தி னசரு ளரிமான்
வேண்டியது முடிக்கும் வென்றித் தானை
ஈண்டிய வாற்ற லெலிச் செவி யரசனும்”[14]

தருகச மன்னனுடன் பகை கொண்டு ஒழுகக்கூடிய அன்பற்ற கொடும் தொழிலை மேற்கொண்டவர்கள், அம்பு விடும் தொழில் வல்ல விரிசிக மன்னனும், மத்தகத் தினையுடைய நல்ல யானையையும் நிலவினைப் போன்ற வெண்குடையையும், சித்திர வேலைப்பாடமைந்த நல்ல மலர் மாலையையும், தாவிப் பாயும் நடையை உடைய குதிரைகளையும் கொண்ட அத்தினாபுரத்து மன்னர்களுள் சிங்கம் போன்றவனும், தான் விரும்பியதைச் செய்து முடிக்கும் திறம் கொண்டவனும், வெற்றியை உடையப் படைகளை உடைய ஆற்றல்மிக்கவனுமான எலிச் செவி மன்னனும் போர் செய்தனர்.

பகைவரால் காண்பதற்கு இயலாத கடல் போலும் பெரும் படையை உடையவனும், நெடிய குடையை உடைய அரசருள் மேன்மை வாய்ந்தவனும், படைக்கலம் பயின்ற பெரிய கையினை உடையவனும் வீரக்கழவ் அணிந்தவனம், அடவி அரசன் என்னும் பெயரை உடைய ஆற்றல் மிக்கவனுமான ஆண்மைத் தன்மையுடன்

“காண்டற்காகக் கடன்மருள் பெரும்படைப்
படைநவி றடக்கைப் பைந்தார்க் கருங்குழல்
அடவி யரசெனு மாண்டகை யொருவனும்”[15]

போரிட்டான்.

மலைக் கூட்டத்தினை ஒத்த மைஎழுதிய யானைக் கூட்டத்தையும், தனது பகை மன்னரைப் புறம் கண்ட வெல்வதற்கு அரிய ஆற்றலையும், சூழ்ச்சியையும், கொலை வேல் கொண்ட படையுடன், நுண்ணிய மணல் அளவான பல படைகளுடன்

"மலைத்தொகை யன்ன மையணி யானை
அருந்திறற் சூழ்ச்சி யடல்வேற் றானை
அயிர்த்துணைப் பல்படை யயோத்தி யரசனும்"[16]

ஆவேசத்துடன் போரிட்டான்.

தன் பகைவர்களைக் கொன்று அழித்தவனம், இயமனைப் போலும் கொலைத் தொழிலில் மிக்கு உயர்ந்த வெற்றியை உடையவனாகப் பகை மன்னர் பலரைப் பற்றி அப்போர்க்களத்திலேயே களவேள்வி செய்தவனம், பகைவரால் வெல்வதற்க அரிய சினத்தை உடையவனாக, மதில் உயர்ந்த போதனபுரம் எனும் நாட்டுக்கு மன்னனான மிலைச்சனும் சினத்துடன் செய்தான்.

"சீற்றத்துப்பிற் செருவெனப் புகலும்
ஆற்றல் சான்ற வரசரு ளரிமான்
பொங்கு மலர் நறுந்தார்ச் சங்கர வரசனும்"[17]

சினம் கொண்ட வலிய போர் எனக் கூறிய அளவில் மிக்க விருப்பம் கொள்ளும் பேராற்றல் மிக்க மன்னர்களுள் சிங்கம் போன்றவனும், பகைவர்களால் கிட்டுவதற்கு அரிய நீண்ட மதிலை உடைய துவாரபதிக்க மன்னனும், பல்வேறு பகை மன்னரைக் கொன்ற வெற்றிக் குடையை உடைய சங்கர அரசனும் விரைந்து போரிட்டான்.

"மல்ல னென்னும் வெல்போர் விடலையும்
தானை மன்னரை மானம் வாட்டிய
பொங்குமயிர் மான்றேர்த் திருநகர்க் கிறைவன்
வெந்நிறற் செய்கை வேசாலியுமென
அடற் றகை மன்னர் படைத் தொகைக் கூட்டி"[18]

செல்லும் போர்தோறும் வெல்லும் இயல்புடைய மல்லன் என்னும் பெயருடைய மன்னனும், படைமிக்க பகைமன்னரை மானம் கெடச் செய்தவனும், ஊன் ஒழுகும் நீண்ட வேலையும் அழகிய வீரக் கழல் கட்டிய கால்களையும், மிகுந்த பிடரி மயிர் கொண்ட குதிரை பூட்டிய தேரினையும் உடைய திரு நகர்க்கு அரசனுமான மிக்க ஆற்றலும் செயலுமுடையவேசாலி செருக்களம் சென்று தருகசனுக்கு எதிராகப் பகை கொண்டு போரிட்டனர். கடும் சூறைக் காற்றானது மோதும் கடல்போலப் பொங்கி எழ பெரிய படைகள் ஆரவாரத்துடன் தத்தம் பகைவர் கலங்கும்படி தாக்கினர்.

உதயணனுடன் அமைச்சன் மண்ணுவாவும், கேகய மன்னனும் ஒன்றுகூடி எலிச் செவி அரசனின் போர் வலிமைமிக்கப் படையோடு கலந்து போரிட்டபோது, எலிச்செவி அரசன் நொடிப் பொழுதில் சிறப்பும், புகழும் மிக்க தருகசனின் உறவான கேகய அரசனின் கவசம் அழியும்படி தனது அம்புகளால் அகற்றித் தன் போர்த் தொழில்

வன்மையால் கேகய மன்னனது பசுமையானத் தலையை அறிந்து அது நிலத்தில் வீழும்படியாகத் தனது வாளை வீசினான். தனது தம்பியை உதயணன் சிறைப்பிடித்ததால் உருமண்ணுவாவை எலிச்செவி அரசன் அவன் அருகே இருந்த வீரர்களையும் கென்று வீழ்த்தினான்[19]. இதுகண்ட உதயணனோ கடலைப் போன்ற பெரிய படைகளின் நடுவே பகைவரைக் கைப்பற்ற எண்ணி, முரசும், சங்குகளும், முருகும் முழங்க தம்முடைய யானைப் படைகளையும், குதிரைப் படைகளையும் முறையாக கலந்து, நிறுத்தி வைத்துக் காம்பில் தைத்த வேல்படையினை ஏந்திய காலாட் படையினையும் பரப்பி[20] கொலைத் தொழில்மிக்க எலிச் செவி அரசனது தம்பி ஏறிய யானையின் பிடரியில் தாவினான். அவனது தலையைத் துண்டிக்காது, அவனால் காரியம் நிறைவேறக் கருதிக் கச்சினால் அவன் தோள்களைக் கட்டினான். பின், எலிச்செவி அரசனிடம் உதயணன் நீ! உரு மண்ணுவாவை கொல்லாமல் பாதுகாப்பாய் எனில், நீயும் உன் தம்பியைப் பெறுவாய் எனக் கூறி தனக்கெதிரே உள்ள வீரம்மிக்க பகைவரது படையைக் கொல்லும் தொழிலில் புகுந்து மிக்க வெள்ளம் போன்று போரிட்டு,

“பெறற்கரு நும்பியைப் பெறுதி நீயெனத்
திறப்படக் கூறி மறப்படை நூறக்”[21]

எனக்கூறி, பகைவர்களை இறந்துபடச் செய்ததுகண்டு, உடைந்து நிற்க இயலாது உப்பால் கட்டிய அணைபோன்று பகைமன்னர் பிழைத்தோர் உடைந்து ஓட,

“படுகளத் தகலம ராயத்
துதயண குமர னுற்றோர் சூழ
விசயமுரசொடு வியனக ரறிய”[22]

வெற்றி முரசம் முழக்குதலோடு உதயணன் வெற்றிபெற்றதாகப் பெருங்கதை எடுத்துரைக்கின்றது.

யூகியின் நட்பு மறம்

வீர நிலைக் காலப் பாடல்கள் நட்பின் ஆழத்தையும் ஆங்காங்கே குறிப்பிடத் தவறவில்லை. வீரத்தலைவர்கள் மட்டற்ற தன்னம்பிக்கை உடையவர்கள். எனினும், பிறர்மாட்டுப் பழகும் முறையில் அவர்கள் நெஞ்சத்தோடு ஒட்டும் உறவும், கொள்வதைக் காணமுடிகிறது. அத்தகைய தலைவர்கள் கொள்ளும் அன்பு மிக நெருக்கமாகவும் நட்பிற்கு இலக்கணமாகவும் இருக்கின்றன. தன்னெஞ்சத்தைத் திறந்து காட்டித் தன் கவலைகளை எல்லாம் கொட்டித் தீர்ப்பதற்கு எத்தகைய தலைவனுக்கும் ஒரு தோழன் தேவைப்பட்டான் போலும்! சிறந்த வீர நிலைக் கவிதைகள் நட்பின் இலக்கணத்தைக் கூறுமுகத்தான் பற்பல இலக்கிய காட்சிகளைப் படைப்பதைக் காண

முடிகிறது. இத்தகைய நட்பு புறநானூற்றுப் பாடலிலும் அதியன், ஔவை மேற்கொண்ட நட்பானது தம்மினும் பல்லாற்றானும், செல்வத்தினும் உயர்ந்திருப்பினும் குறுக்கீடு இன்றி தொடர்வது போல, பெருங்கதையிலும் யூகி தனது பால்ய பருவம் தொடங்கி, உதயணனின் வெற்றிக்கும் புகழுக்கும், தன் படைத்திறத்தாலும், மதியூகத்தாலும் ஊன்றுகோலாய் விளங்கியமை காணமுடிகிறது.

"ஒன்றி ஒழுகலின் உயிரே போலவும்
நன்றி யன்றிக் கன்றியது கடிதற்குத்
தசுவில செய்தலிற் பகைவர் போலவும்
இணையன பிறவும் இனியோர்க் கியன்ற
படுகடன் ஆதியிற் பட்டது நினையான்"[23]

யூகி, உதயணனுடன் கூடவே இருப்பதால் உயிர்போலவும், நன்மை தீமை அறிவுறுத்தலில் பகைவர் போலவும்; நட்பு தவிர வேறொன்றும் எதிர்பாராது கடமையாற்றுகிறான். பிரச்சோதனன் சூழ்ச்சியால் சிறைப்பட்ட உதயணனை மீட்க, இறந்தவனாக நடித்து, ஒற்றாராய்ந்து தத்தையை உதயணன் கைப்பற்றிச் சென்றபின்,

"உயிரொன் றாகிய செய்தீர் காதற்
றுணைநலத் தோழன் றுயர மறுத்தற்"[24]

உதயணன் உயிர், தன்உயிர் என்று தூய அன்பை உடைய யூகி, உதயணனைத் தொடரும், பிரச்சோதனனின் வீரர்களை அழிக்க, பலவகைத் திறம்மிக்க கேடயத்தைக் கையில் கொண்டு, ஊழிமுடிவில் அனைவருக்கும் அச்சமுண்டாகும் படி தோன்றி, உயிர்களைப் பறிக்கும் கொடிய செயல் கொண்ட இயமனைப் போல் போர்க்களத்தே தோன்றி எதிர்த்த பகை வீரரை எல்லாம் கொன்று வீழ்த்தினான்.

பிரச்சோதனனிடமிருந்து சிறைமீட்ட பின், மாறுவேடத்தில் வந்த யூகியைக் கண்டு,

"ஐயந்தீர்ந்து வெந்துயிர்த் தெழுந்துநின்
நூறில் சூழ்ச்சி யூகந்த ராய
தெளிந்தேன் வந்தனையென்றுதன் சந்தனமார்பிற்
பூந்தார் குழையப் புல்லினன்"[25]

ஐயம் தீர்ந்து, உதயணன் வெப்ப பெருமூச்சு விட்டு எழுந்து நின்று குற்றமற்ற நல்ல சூழ்ச்சியினை உடைய யூகந்தராயனே! தெளிந்தேன் என்று கூறி யூகியைத் தன் இரு கரங்களாலும் சந்தனம் பூசப்பட்ட தன் மார்பில் அணிந்துள்ள பூமாலையான குழையும் படிகாயத் தழுவிக் கொண்டான்.

“.................பொருக்கெனத்
தீந்தேன் கலந்த தேம்பால் போல
நகையுருத் தெழுதரு முகத்த னாகித்
துறந்தோர்க் கொத்த தன்று நின் சிறந்த
அருள்வகை யென்னா வகலுந் தோழனைப்
பொருள்வகை யாயினும் புகழோய் நீயினி
நீங்குவை யாயி னீங்குமென் னுயிரெனப்”[26]

அவ்வாறு உதயணன் தழுவியவுடன் யூகி, பொருக்கென எழுந்து இனிய தேன் கலந்த இனிய பால்போன்று புன்னகை தவழும் முகத்தை உடையவனாகி, “மன்னா! நீ இவ்வாறு மார்புடன் தழுவும் செயல் சிறந்தது எனினும், இச்செயல் பொருந்தாது எனக்கூறி அகன்று நின்றான். உதயணன், புழுடையோனே! இனி நீ செய்யத்தக்கச் செயல் வகையினால் என்னைப் பிரிந்து போவாய் என்றாலும் என் உயிர் என்னை விட்டு நீங்கும் என்பது உறுதி. எனவே, போகாதே” என்று கூறுமளவு உதயணன் யூகியின் நட்பு மறம் பெருங்கதை எடுத்துரைக்கின்றது.

உதயணன் போர் மறம்

யூகியின் பால்ய நண்பனும் கோசம்பியின் அரசனுமான உதயணகுமரனின் தெய்வயானை மறைந்து போக, பிரிவாற்றாமையில் அதனைத் தேடி உதயணன் கானகம் சென்றபோது, திறை செலுத்தாதிருந்த உதயணனை சிறைப்பிடிக்க இதுவே தருணம் எனக் கருதி சாலங்காயன் என்னும் அமைச்சனின் சூழ்ச்சிபடி, காட்டில் எந்திர யானையில் வீரர்களை மறைத்து உயிருடன் இருப்பது போல் நடமாட விட்டான் பிரச்சோதன மன்னன். தெய்வயானையின் எண்ணமே மேலோங்கியிருந்த வருத்தத்தால், மாய யானையும் உண்மை என எண்ணி, அமைச்சன் வயந்தகன் தடுத்தும் கேளாது, வீரர்கள் ஆயுதம் ஏதுமன்றி, தெய்வயாழுடன் சூழ்ச்சியறியாமல் உதயணன் சிக்கினான். நொடிப் பொழுதில் யானையின் வயிற்றில் இருந்த வீரர் கூட்டமும், சுற்றிலும் பெரும்படையும் சூழ்ந்து வருவதைக் கண்ட உதயணன் சித்தம் தெளிந்து, வயந்தகனிடம் நண்பா! “நாம் இருவரும் பெரும் படையினில் சிக்கிக் கொள்வது சரியன்று, நீ விரைந்து நம் நாடு சென்று யூகியிடம் கூறு எனது தெய்வாளும் என்னிடம் இருக்கும்போது என்பால் கூற்றுவனும் வர அஞ்சுவான். இப்படை எனக்கு எலிக் கூட்டம்; யானோ ஐவாயரவம்; அகன்று போ! என்று வயந்தகனை அனுப்பி விட்டு, அரிமான் போல பகை நோக்கி உதயணன் நின்றமையையும், வேட்டுவரிடம் தனித்து போரிட்டு நின்றமையையும்”,

"ஒலித்தக்கால் என்ஆம் உவரி எலிப்பகை?
நாகம் உயிர்ப்பக் கெடும்"[27] (குறள் - 763)

எலிகள் பலவாக இருந்தாலும் நாகம் தலையைத் தூக்கினால் போதும் அவை இருந்த இடம் தெரியாமல் ஓடி மறையும். அதுபோல் கோழைகள் பலர் ஒன்று சேர்ந்து இருந்தாலும் வீரமுள்ள ஒருவனைக் கண்டால் அஞ்சி ஓடுவர் என்ற திருக்குறளுக்கு ஏற்ப கொங்குவேள் பெருங்கதையில் உதயணனின் சிறந்த ஆண்மையைப் போற்ற, எலிக் கூட்டமெனப் பகைவரையும், உதயணன் மறத்தை நாகத்துடனும் ஒப்பிட்டு உயர்வுபடுத்தியுள்ளமையைப்

"பைவரி நாகத்து ஐவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற வெலிக்கணம் போல
ஒழிந்தோ ரொழியக் கழிந்தோர் காணா"[28]

படம் விரிந்த ஐந்து தலைப் பாம்பின் ஐந்து வாய்களிலிருந்தும் ஒலியுடைய மூச்சுக் காற்று வீசப்பட்ட எலிக்கூட்டம் போல இறந்து விழுந்தவர் போகத் தப்பி ஓடியவர் தம்முள் ஒருவரை ஒருவர் காண இயலாதபடி சிதறி ஓடும்படி போரிட்ட உதயணன் மறம் பெருங்கதையில் காண முடிகிறது. இங்ஙனம் உதயணன் நாடிழந்து காட்டில் அலைந்தபோது, கோசம்பியை ஆருணியரசன் உதயணனின் தம்பியரையும் விரட்டி அடித்தான். ஆருணியைக் கைப்பற்ற உரிய காலத்தை எதிர்பார்த்திருந்த உதயணனுக்கு, திருகசன் எனும் மகத நாட்டு மன்னனின் நட்பு கிடைக்கப் பெற்று, ஆருணி மீது உதயணன் போர் தொடுத்தலைக் கண்ட வேற்றுமன்னர்கள்,

"உதயண குமர னுரிமை தழீஇ
அடற்பே ரியானையு மலங்குமயிர்ப் புரவியும்
படைக்கூழ்ப் பண்டியும் பள்ளி வையமும்
நடைத்தே ரொழுக்கு நற்கோட்டூர்தியும்"[29]

தன் பரிவாரங்கள் சூழும்படி, வெற்றியுடைய, பெரிய யானைப் படைகளும், அசைகின்ற பிடரிமயிரினை உடைய குதிரைப் படைகளும், படைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை ஏற்றிய வண்டிகளும், யானைகளும், இவற்றை இடைஇடையே நிறுத்திக் கொடிப்படையை முன்னால் செலுத்திக் கூலிப் படையினைப் பின் நிறுத்தி, சுற்றுப்படையைப் பக்கங்களில் செலுத்திப் பறவைகளைப் போன்று விரைவாகச் செல்லும் "இவ்வத்தவ மன்னன் இவ்வாறு படைகளைச் சேர்த்துக் கொண்டு போகிறான். எந்த அரசன்மீது செல்வானோ? இந்நிகழ்ச்சி நாம் மிகவும் அஞ்சத்தக்கது" என வருந்திக்கூற,

“சீற்றத் துப்பிற் சேதியர் பெருமகன்
கழலணி காலினன் கரண யாப்பினன்
நிழலணி நல்லவா ளழல வீசித்”[30]

சினம், வலிமை ஆகியவற்றை உடைய உதயணன், வீரக்கழல் அணிந்த காலினையும், போர்க்கவசம் பூண்டும், ஒளியுடையதன் வாளை மின்னும்படி வீசிக் கொண்டு,

“ஒன்னாப் பகையா னுதயண னென்பேன்
இன்னா மன்ன நின்னுயி ருணீஇய
வந்தனெ னென்றே சென்றுமே னெருங்க”[31]

இன்னாமையுடைய ஆருணியே! “உனது உயிரைக் குடிப்பதற்கு உன்னுடன் பொருந்தாத பகைவனான உதயணன் என்னும் பெயரை உடைய நான் இதோ வந்தேன்” என்று கூறியபடி ஆருணி மன்னனை நெருங்கி வீரமிக்க சிங்கமானான் உதயணன்.

“சிலைத்தன தூசி மலைத்தன யானை
ஆர்த்தனர் மறவர் தூர்த்தனர் பல்கணை”[32]

என எங்கும் செந்துகள் எழுந்தது. யானை, குதிரை, தேர் வீரர்கள் கொல்லப்பட்டு விழுந்தனர்.

“எதிர்த்த மன்னனைச் செயிர்த்தனன் றலைப்பெய்
தீயாவாரும் வேண்டா விதன்பின்மற் றிவனை
வீயநூறி வெஞ்சினந் தணிகனெ”[33]

உதயணன் சினங்கொண்டு, இனி எனக்குத் துணையாக யாரும் வேண்டா, ஆருணியைச் சாகும்படித் தாக்கி நான் என் கொடிய சினத்தை ஆற்றிக் கொள்வேன் எனக் கூறி,

“றாரணி மார்பன் யானையை வீழாக்
கனல் சொரி மலையிற் கவிய நூறித்
தார்கெழு மார்புந் தலையுந் தகர”[34]

ஆருணி அமர்ந்திருந்த யானையைத் தன் படைக்கலத்தினால் வீழ்த்தி, ஆருணி மன்னனின் மார்பும் தலையும் சிதைந்திடும்படி தாக்கி, நிலத்தில் விழும்படி படைக்கலங்களால் எறிந்தான். ஆருணி அழிவு எய்தி இறந்து வீழ்ந்தான். கருகுலத்து மன்னனான உதயணன் வெற்றி பெற்றான் என முரசறையக் கட்டளைமிட்டு, இறந்த ஆருணியைக் கண்டு இரங்கி,

"கொற்றம் பெற்றனன் குருகுலத் திறையென
வெற்ற முரசம் வேழ மேற்றி
நகரின நாட்டினம் பகர்வன ரறைகெனப்
பின்னரை போக்கி யொன்னாற் குறுகிப்
படைத்தொழில் வதுவை நம்மாட்டெய்த
நடுக்கமில் வேந்தனை நாமு முன்னின்
றடக்கற் பாலமென் றியாழறி வித்தகன்
அமரர் புகழத் தமரி னடக்குவித்
தீம மேற்றி"[35]

இம்மன்னன் போரச் செயலாலான வீரமகளை நம்மால் மணம் முடித்தான். நடுக்கமில்லா இம்மன்னனை நாமே முன்னின்று அடக்கம் செய்வோம் என்று அம்மன்னன் உடலைத் தீக் கொளுவி அடக்கம் செய்வித்து அவனது உரிமை சுற்றத்தார்க்கும் சீவிதம் வழங்கியமையை பெருங்கதை எடுத்துரைக்கின்றது.

முடிவுரை

சினத்தின் சீர்மை பகைப்புலத்தின் நீர்மை; எந்த ஒரு பண்பும் ஓர் எல்லைக்கு அப்பாற்படுமேல் அக்குணத்தின் மேம்பாட்டால் உணர்த்தப்படுகிறவன் உயர் நிலைக்கு ஏற்றப்படுதல் இயல்பு போலவே பெருங்கதையின் மறவர்கள், சிறந்த குடியில் பிறந்து உலகம் புகழும் வீரராய் திகழ்ந்து, கொடையாளியாய் உயர்ந்து வாழ்ந்தமையைப் பெருங்கதையின் ஆற்றல்மிகு மறவர்கள் எல்லா நிலைகளிலும் எடுத்துரைக்கின்றது.

சான்றெண் விளக்கம்

1. புறநானூறு பக் - 108 - பா - 87
2. பெருங்கதை - 1:54:131-132
3. மேலது, பா - 1:54:138
4. மேலது, பா - 1:55:144
5. மேலது, பா - 1:55: 146-147
6. புறநானூறு - பக் - 76 - 77, பா - 55 : 7-10
7. இன்னா நாற்பது - 18:2
8. பெருங்கதை - பக் - 231 - 1:45:93-96
9. மேலது, பா - 3:20:8-9
10. மேலது, பா - 3:20:10-12
11. மேலது, பா - 3:20:10-12
12. மேலது, பா - 3:20:35-42

13. புறநானூறு - பக் - 100 - பா - 76
14. பெருங்கதை - 3:17: 4-10
15. மேலது, பா - 3:17: 11, 15-16
16. மேலது, பா - 3:17:17, 20-21
17. மேலது, பா - 3:17: 27 - 28, 31
18. மேலது, பா - 3:17: 35-37
19. மேலது, பா - 3:20 100-106.
20. மேலது, பா - 3:19:195? 196. 211-213
21. மேலது, பா - 3:20: 87-92.
22. மேலது, பா - 3:20: 119 - 120.
23. மேலது, பா - 3:20: 120-123
24. மேலது, பா - 3:20: 126-128
25. மேலது, பா - 2:9: 222-225
26. மேலது, பா - 1:46:77-78,98-100
27. மேலது, பா - 4:7: 192-197
28. மேலது, பா - 1:56: 273 - 275
29. மேலது, பா - 3:24: 34-37
30. மேலது, பா - 3:27: 137-139
31. மேலது, பா - 3:27:142-144
32. மேலது, பா - 3:27:106-107
33. மேலது, பா - 3:27: 150-152
34. மேலது, பா - 3:27: 167-169
35. மேலது, பா - 3:27: 181-190.

துணைநூற்பட்டியல்

1. ஆச்சார்யா - பி.எஸ்., 2014, திருவள்ளுவர் வழங்கிய திருக்குறள், நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு, தி.நகர், சென்னை - 17.
2. ஆனந்தி ந., 2018, கொங்கு வேளிர் அருளிய பெருங்கதை, ஐந்து தொகுதிகள், முதற் பதிப்பு, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணா புரம் தெரு, சென்னை - 14.
3. இராம சுப்ரமணியம் எம். ஏ., 2009, பதினெண் கீழ்க்கணக்கு தொகுதி - 1, முதற் பதிப்பு, செல்லப்பா பதிப்பகம், மதுரை.
4. கதிர் மகாதேவன் (ப.ர்) 1985, ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், மூன்றாம் பதிப்பு, பெரிய நாயகி அச்சகம், இலட்சுமி வெளியீடு, மதுரை - 21.
5. புலியூர் கேசிகன், 2010, புறநானூறு மூலமும் உரையும், முதற்பதிப்பு, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், ஸ்ரீ கிருஷ்ணா புரம் தெரு, சென்னை - 600 014.

REFERENCES

1. ACHARYS P.S., 2014 Thiruvalluvar valangiya thirukural , narmadha padhipagam, 10, nana street, t nagar, Chennai - 17
2. ANANDHI N., 2018 Kongu velir aruliya perunkathai , SARATHA pathipagam, Chennai - 14
3. RAMA SUBRAMANIAM M.A., 2009, pathinenkeelkanaku thoguthi - 1, chellapa pathipagam, Madurai.
4. KATHIR MATHAVAN (P.R) 1995 oppilakiya nokkil sanga kallam 3rd edition, periya nayagi achagam, lakshmi veliyeedu, Madurai - 21
5. PULIYUR KESIGAN, 2010 purananooru moolamum urayum, 1st edition, saradha padhipagam, G - 4, Santhi Adukagam, 3, sri krishnapuram street, Chennai - 14